பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 19 செவ்வாய்க்கிழமை 01.02.2022 கதிர் 88

இது ரகசியம் அல்ல!

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான பணிக்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரையை - நகல் யாப்பு வடிவத்தை அரசுத் தலைமையிடம் கையளித்து விட்டது என்று கடந்த வார இறுதியில் செய்தி வெளியானது 2

# இந்திய மீனவரின் தொல்லை ஐ.நா. தரப்பிடம் முறைப்பாடு



## கஜேந்திரகுமார் முன்வைத்தார்

(ந.லோகதயாளன், கலையமுதன்)

யாழ்ப்பாணம், பெப்.01

இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களால் வடக்குத் தமிழ் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹெனா சிங்கர் அம்மையாரிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. முறைப்பாடு செய்தார். 2

## மன்னார் கடற்படை கைது செய்த 30 மீனவர்களையும் மடக்கிய 7 படகுகளையும் அதிரடியாக மீட்ட மக்கள்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.01

மன்னார் தாழ்வுபாட்டில் சுருக்கு வலை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கடற்படையினர் 7 படகுகளை அந்த வலைகளோடு மடக்கி, 30 சந்தேக நபர்களையும் கைது செய்து, கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றபோது, 9

## பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் சிக்கினர்

(ந.லோகதயாளன்)

யாழ்., பருத்தித்துறை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் இரு படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாதவாறு அண்மையில் 9

## காணாமல்போன மீனவர்கள் இருவரும் சடலங்களாக மீட்பு!



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்று காணாமல்போன இருவரும் நேற்று சடலங்களாகக் 2

## இந்திய மீனவர்களின் அடாவடிக்கு எதிராக வடமராட்சியில் போராட்டம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

இந்திய மீனவர்களால் வடமராட்சிமீனவர்களின்வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன. குறித்த செயலைக் கண்டித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி, பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் 9

## நேற்று மட்டும் 1,082 பேருக்கு கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 1,082 பேர் நேற்று அடையாளம் 9

## ஏப்ரல் வரை தடையின்றி மின்சாரம்

நாட்டில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது 9

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பல்கலை மாணவி மரணம்

(ந.லோகதயாளன்)

மூன்று தினங்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இணுவில்மேற்கைச்சேர்ந்த சிவகரநாதன் திவாகரி (வயது 23) எனும் சப்ரகமுவா பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவியே 9

## கொழும்பு மாநகர சபையின் கூட்டத்தில் கூழ் முட்டை, மிளகாய்த்தூள் தாக்குதல்!





கொழும்பு மாநகர சபையில் நேற்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் பிரதீப் ஜயவர்தன மீது மிளகாய்த்தூள் கலந்த கூழ் முட்டைகளால் 9

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்ததே.

அதில் இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற செய்திகள் தெற்கில் வெளியாகியிருந்தன. 'காலைக் கதிர்' அதன் சாரத்தை வெளியிட்டிருந்தது.

ஒன்று – புதிய அரசமைப்புக்கான நகலில் மாகாண சபை என்ற அதிகாரப் பரவலாக்கல் முறைமை குறித்து பேச்சுக்கும் இடமில்லை.

அடுத்தது – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கி, நாடாளுமன்றுக்குப் பதில் கூறும் கடப்பாடு கொண்ட பிரதமரின் கீழான ஆட்சி முறை குறித்து அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

அரச உயர் வட்டாரத்துடன் மிக நெருக்கமாகப் பழகும் தரப்புகளுடன் தொடர்பு கொண்ட மூத்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் அந்தச் செய்தி – தகவல் – முற்றிலும் உண்மை என்று நேற்று அடித்துக் கூறினார்.

ஆனால், மாகாண சபை முறைமையை ஒழிக்கும் திட்டம் ஏதும் அரசுக்குக் கிடையாது என்று யாழ்.வந்திருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும், நீதி அமைச்சர் அலி சப்ரியும் கூறியிருக்கின்றனர்.

"அப்படி மாகாண சபை முறைமையை நீக்கும் திட்டம் ஏதும் இருக்குமானால், அந்த நகல் திட்டம் குறித்து ஜனாதிபதி என்னுடன் கலந்தாலோசித்திருப்பார். அவர் கலந்தாலோசிக்கவில்லை. ஆகையினால் அப்படி ஏதும் இருக்காது." – என்று நீதி அமைச்சர் அலி சப்ரி சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

அப்படி ஒரு தீர்மானம் இருந்திருந்தால் ஜனாதிபதி தம்முடன் பேசியிருப்பார் என்பதை என்ன முகத்தை வைத்துக் கொண்டு நீதி அமைச்சர் அலி சப்ரி கூறியிருப்பார் என்பது எனக்குப் புரியவில்லை. அவருக்குக் குறுகிய கால மறதி ஏதும் உண்டா என்று ஒரு கேள்வியும் எழுகின்றது.

'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்ற விவகாரம் முழுக்க, முழுக்க நீதித்துறையுடன் – சட்டத்துறையுடன் – சம்பந்தப்பட்டது. அத்தகைய விடயத்துக்கென குறிப்பாக ஜனாதிபதி செயலணி ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார். அந்த அறிவிப்பு வெளியாகி, ஊடகங்களில் விவரம் வந்த பின்னர்தான் நாட்டின் நீதியமைச்சரே அதனை அறிந்தார். அதையொட்டி தமது அமைச்சுப் பதவியைத் துறக்கும் அளவுக்கு அலி சப்ரி போனமையை அவர் மறந்திருக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

'ஒரு நாடு; ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி அமைப்பது குறித்து நீதி அமைச்சரான தம்மிடம் கலந்தாலோசிக்காத ஜனாதிபதி, அந்த 'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்ற விடயத்தின் தொனிப் பொருளை நடைமுறைப்படுத்துவது என்றால் அதன் பிரதான பணியே நாடாளுமன்றுக்கு மேலதிகமாக, மாகாண ரீதியில் வெவ்வேறான சட்டங்களை உருவாக்கும் அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதே என்றிருக்கும் போது – உத்தேச புதிய யாப்பின் நகலில் மாகாண சபை முறைமையை ஒழிக்கும் யோசனை இருப்பது குறித்து, ஜனாதிபதி தம்முடன் நேரத்தோடு கலந்தாலோசனை செய்திருப்பார் என்று நீதி அமைச்சர் எப்படி எதிர்பார்க்க முடியும்?

யார் காதில் பூச்சுற்றுகின்றார் நீதி அமைச்சர்?

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை விட்டு விடுங்கள். அடிக்கடி மாற்றி, மாற்றி – ஒன்றுக்கொன்று முரணான – சட்ட வியாக்கியானம் செய்வதுதான் அவர் சிறப்பு.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழர் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு ஒன்றை வழங்குவது குறித்து விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து முயற்சிக்க சர்வதேச தளத்தில் இணக்கம் கண்ட இலங்கை அரசு குழுவின் தலைவர் அவர்தான்.

அந்த அறிவிப்பை மறந்து இப்போது அதற்குத் தலைகீழான முறையில் ஏதோ பேசிக் கொண்டிருப்பவர் அவர்தான்.

மாகாண சபை முறைமையை அடியோடு கைவிடும் விதத்தில் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் இருப்பதை மறுக்கும் விதத்தில் இந்த இருவரும் விடுக்கும் அறிவிப்பை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்றார் அந்த சிங்கள ஊடகவியலாளர் நண்பர்.

"இரண்டுமே உண்மை. 'ஒரு நாடு; ஒரே சட்டம்' – என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் கோட்டாபய அரசு, இந்தச் சந்தர்ப்பத்தில் – இந்த வாய்ப்பில் – இந்த முறைமையை ஒழிக்காவிட்டால் இன்னொரு வாய்ப்புக்கு மேலும் பல தசாப்தம் காத்திருக்க வேண்டி நேரும் எனக் கருதுகின்றது.

"அடுத்தது – நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு. இப்போதைய அரசியல் களநிலைவரம் ராஜபக்ஷக்களுக்கு நன்கு தெரியும். அடுத்த தடவை இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி தங்கள் பக்கத்துக்கு – தங்களில் ஒருவருக்கு – கிட்டுவதும் துர்லபம். அது இந்தத் தடவை கைமாறினால் இனி இப்போதைக்கு மீண்டும் தங்கள் பக்கம் அது சிக்குவதற்கு வாய்ப்பு இருக்குமோ தெரியாது என்று அவர்கள் சிந்திக்கின்றார்கள்.

"அந்தச் சூழலில் இந்தப் பதவி இன்னொரு கைக்கு மாறினால் தங்களின் எதிர்காலமும் கேள்விக்குறி எனக் கருதும் அவர்கள் அதனால் கிடைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து, கோட்டாபய ராஜபக்ஷவின் இந்தப் பதவிக் காலத்துடன் அந்த ஆட்சிமுறைமை இல்லாமல் போகும் ஓர் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளார்கள். ஆகவே உங்களுக்குக் கிடைத்த இந்தத் தகவல்கள் தவறே இல்லை. முழுவதும் சரி. அதுதான் இப்போதுள்ள நிலைமை" – என்று அடித்துக் கூறினார் அந்த ஊடக நண்பர்.

அவர் குறிப்பிடும் காரணங்களை, தற்போதைய அரசியல் களநிலைவரங்களுடன் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது அவரது கருத்து – தகவல் – கனகச்சிதமாகப் பொருந்துவதை உணர முடிகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்டு வந்து அதில் பதினாறு ஆண்டுகள் கோலோச்சிய ஐக்கிய தேசியக் கட்சி, அதன் பின்னர் இப்போது இருபத்தியெட்டு ஆண்டுகள் தாண்டியும் அதை மீளப் பெறமுடியாது கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கின்றது.

இப்போதைய ஏற்பாடுகளின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2024 நடுப்பகுதியில் நடைபெறும் போது அந்த ஜனாதிபதிப் பதவியை, அதை ஆரம்பத்தில் 16 வருடங்கள் தக்க வைத்திருந்த ஐ.தே.க. அதனை இழந்து மூன்று தசாப்தங்கள் – முப்பது ஆண்டுகள் – கடந்திருக்கும்.

இப்போது ஐ.தே.கவின் வாரிசுப் பிறப்பாக ஐக்கிய மக்கள் சக்தி களத்தில் உள்ளது.

இனி நடக்கக் கூடிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் ஒருவரிடம் அதைப் பறிகொடுத்தால் மொட்டுக் கட்சியும், சு.கவும் நீண்டகாலம் அதை மீளப் பெறுவதற்கு கொட்டாவி விட்டுக் காத்திருக்க வேண்டி நேரும். சில சமயங்களில் ஐ.தே.கட்சி போல மீள அதனைப் பெறமுடியாமல் போனாலும் போகும் என்றெல்லாம் ராஜபக்ஷக்கள் சிந்திக்கின்றார்கள். அதனால், மக்கள் செல்வாக்கை மோசமாக இழந்து வரும் ராஜபக்ஷக்கள் தரப்பு உரிய நாடாளுமன்றப் பலம் கைகளில் இருக்கும் போதே, அரசமைப்பை மாற்றி, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க முயலும் என்பது திண்ணம்.

இன்றைய நிலையில் ஏனைய பிரதான சிங்களக் கட்சிகளும் அதற்கு இணங்கி, அதனை ஒப்பேற்ற முயலும்.

சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகள்தான் இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை மாற்றம், விகிதாசாரத் தேர்தல் பிரதிநித்துவத்தை மாற்றியமைக்கும் தேர்தல் சீர்திருத்தம் போன்றவற்றை எதிர்க்கும்.

சிறுபான்மை இனத்தவரின் இந்தக் கவலையை – கரிசனையை – ஆட்சேபத்தை – பெரும்பான்மை இன மக்களின் கட்சிகள் – அதாவது பேரினவாதக் கட்சிகள் – பொருட்படுத்தப்போவதில்லை.

ஏனெனில் அதுதான் அவற்றின் பரவணிப் பண்பியல்பு.

இவ்விடயத்தில் சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகள் கத்தி, கூக்குரலிட்டு, ஆர்ப்பாட்டம் நடத்தி, அழிச்சாட்டியம் பண்ணிவிட்டு, அடங்க வேண்டியதுதான் – பெரும்பான்மையினரை எதிர்த்தோம் என்ற திருப்தியுடன்.

– மின்னல் –

## இந்திய மீனவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு நாள் பயணமாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹெனா சிங்கர் அம்மையார் நேற்று மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை நாவலர் வீதியில் உள்ள இல.386இல் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்தில் சந்தித்தார்.

த.தே.ம.முன்னணியின் சார்பில் நாடாளுன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் மற்றும் முன்னணியின் மகளிர் அணித் தலைவி சு.வாசுகி ஆகியோர் ஐ.நா. பிரதிநிதியை நேற்று மாலை சந்தி த்தனர்.

சந்திப்பை முடித்து வெளியேறும்போது ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி தெரிவித்தவை வருமாறு:–

எங்கள் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் மோசமான செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கைக் கடற்படை எந்த விதத்திலும் உதவி செய்யவில்லை. மாறாக, அவர்களின் முழு ஒத்துழைப்புடன்தான் அந்த மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வேலைகள் தொடர்கின்றன. எங்களுடைய தமிழர் தாயகத்தின் கடற்பரப்பில் தமிழ் மீனவர்கள் தங்கள் தொழிலைச் செய்வதற்கு கடற்படையினர் உதவுகிறார்கள் இல்லை. எங்கள் மீனவர்கள் கடலுக்கு போனால் நடுக்கடலில் வைத்து அவர்களது படகை மறித்து, பாஸ் இருக்கின்றதா என்று சோதிக்கிறார்கள். கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் படகில் உள்ளனவா என்று தேடுதல் நடத்துகிறார்கள். நடுக்கடலில் அந்த மீனவர்களுக்கு தொல்லை கொடுக்கும் இலங்கை கடற்படையினர், பக்கத்திலுள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்கிறார்கள் இல்லை. மாறாக அவர்களின் அனுசரணையுடன்தான் தமிழ் மீனவர்களின் தொழிலை – வாழ்வாதாரத்தை – அழிக்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதனை ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் நாம் விளங்கப்படுத்தித் தெரிவித்தோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத அமர்வின் அறிக்கை கடுமையானதாக இருக்கும்.

அரசியல் விடயங்கள், உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பில் பேசியுள்ளோம். 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்ற தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கை சம்பந்தமாகவும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக – நேர் மாறாக – நடைபெறுகின்ற விடயம் தொடர்பிலும் பேசியுள்ளோம்

தமிழ் தேசிய அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண்கள் எதிர் கொள்ளும் மோசமான பழி வாங்கல் சம்பந்தமாகவும் தெரிவித்துள்ளோம்.

தென்னிலங்கை சூழல் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள், உரிமை மீறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் அவருக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

அமைதியாக அனைத்தையும் உள்வாங்கிய அம்மையாரிடம் கடந்த அறிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தோம்.

அரசாங்கம் ஒன்று புதிதாக ஆட்சிக்கு வந்ததால் அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட வேண்டும் என அவர் சமாதானம் சொல்லியிருந்தார்.

ஆனால் இந்த முறை அறிக்கை கடுமையானதாக இருக்கும் என கூறியிருந்தார் – என்றார்.

## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரையொதுங்கியுள்ளனர்.

வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான பிறேம்குமார் மற்றும் அவரின் சகோதரியின் மகனான 21 வயதான தணிகைமாறன் ஆகிய இருவரும் கடந்த 27ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் கரை திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள், விளையாட்டுக் கழகத்தினர் ஆகியோர் இணைந்து வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் இரவு – பகலாக பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அவர்களையோ, அவர்கள் பயணித்த படகையோ கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. ஆனால், அறுந்த வலைகள் மட்டுமே மீட்கப்பட்டிருந்தன.

அவர்களின் படகை இந்திய ரோலர் படகுகள் மோதி விபத்துக்குள்ளாக்கி இருக்கலாம் என மீனவர்கள் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் நேற்று நண்பகல் தணிகைமாறன் என்பவருடைய சடலம் ஆழியவளை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியது.

அதைத் தொடர்ந்து பிற்பகல் வேளையில் பிறேம்குமார் என்பவருடைய சடலம் கேவில் பகுதியில் கரையொதுங்கியது.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# பலாலி விமான நிலையம் விரைவில் திறக்கப்படும்!

## அரசு அறிவிப்பு



நாட்டில் ஏற்பட்ட கொரோனா நெருக்கடி காரணமாகவே யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளதே தவிர வேறெந்த அரசியல் நோக்கங்களும் இல்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே, விரைவில் பலாலி விமான நிலையம் திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலை காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டிருந்தன என்றும் அதே போல யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையமும் மூடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஏனைய சில விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதேபோல பலாலி விமான நிலையமும் திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது பலாலி விமான நிலையத்தில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், குறிப்பாக ஓடுபாதை விரிவுபடுத்த வேண்டியுள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, பல விமான சேவைகளுக்கான அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் காரணமாக சற்று தாமதநிலை காணப்படுகின்றபோதும் அந்த வேலைகள் முடிந்த பின்னர் விரைவாக பலாலி விமான நிலையம் திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மஹிந்தவின் வங்கிக் கணக்கில் பணம் எதுவும் திருடப்படவில்லை

## நாமல் தெரிவிப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வங்கிக் கணக்கிலிருந்து பணம் எதுவும் திருடப்படவில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வைபவம் ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும், இணையத்தளங்கள் இவ்வாறான சம்பவங்களை தெரிவிப்பதாகவும் அதற்கு பதிலளிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மரம் வெட்டும் இயந்திரத்தால் வெட்டிக் கொடூரக் கொலை!

இருவருக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவரின் இரு கால்களையும் மரம் வெட்டும் இயந்திரத்தால் வெட்டியதில் குறித்த நபர் உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகி உள்ளது.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹாங்கொட பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பொஹோலியத்த – கலகெதர பகுதியைச் சேர்ந்த 32 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 54 வயதுடைய கடுகஸ்தோட்டை மஹாங்கொட பகுதியைச் சேர்ந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சதொச ஊடாக மற்றுமொரு சலுகை



சதொச நிறுவனத்தின் ஊடாக நேற்று திங்கட்கிழமை) முதல் ஒரு பெரிய தேங்காய் அதிகபட்ச விலையாக 75 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தென்னை அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஒவ்வொரு நுகர்வோருக்கும் ஒரே நேரத்தில் 5 தேங்காய்களை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.


# பெறுகை அறிவித்தல்
# தனியார் பாதுகாப்புச் சேவை
# பருத்தித்துறை நகரசபை

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2022.02.01 – 2022.02.17 வரை
மு.ப 9.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித்திகதி : 2021.02.17 பி.ப. 3.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 2021.02.17 பி.ப. 3.00 மணி
கேள்வி திறக்கும் இடம் : பருத்தித்துறை நகரசபை

01) பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02) சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

03) சேவை வழங்குநர்கள் குறித்த சேவையில் ஆகக்குறைந்தது 05 வருட அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்

04) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்படிவக் கட்டணமாக ருபா2,000.00 (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்துவதுடன் , மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ருபா. 5000.00 இனை பணமாக அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

05) கேள்விப்பத்திர ஆவணங்கள் 2022.02.17 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு **தவிசாளர், பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06) கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். அதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

07) கேள்விப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் மேல்மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிடப்படுவதுடன் கேள்வியின் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும்

08) கேள்வி பத்திரங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுத் தலைவருக்கே உரியதாகும்.

09) மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி இல 021 226 3213

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை | |
|---|---|---|---|---|
| | | பகல் | பாதுகாப்புப் பிணை தொகை (மீளளிக்கக் கூடியது) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | பருத்தித்துறை மரக்கறிச்சந்தை, மீன்சந்தை பகல் காவற் கடமை | 04 | 5,000.00 | 60 நாட்கள் |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**பருத்தித்துறை நகரசபை.**

**01.02.2022**


# தங்க மங்கைக்கான கௌரவிப்பு நிகழ்வு



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதிய நகர் கிராமத்தை சேர்ந்த யுவதி கனேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். இந்த யுவதிக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கரிப்பட்ட முறிப்பு புதியநகர் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த யுவதியைக் கௌரவிக்கும் நோக்கில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றை ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

அந்த வகையில் நேற்று காலை 11 மணிக்கு புதிய நகர் புதிய சூரியன் விளையாட்டு மைதானத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் புதிய சூரியன் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனும் சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பரமோதயன் ஜெயராணி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் நா.குகேந்திரா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

தங்கம் வென்ற யுவதியின் வீட்டில் இருந்து உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானம் வரை யுவதி மற்றும் அவருடைய தாயார், அம்மம்மா, அம்மப்பா மற்றும் விருந்தினர்கள் கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

மிகவும் பின்தங்கிய கிராமத்தில் இருந்து தனது திறமையை வெளிக்காட்டிய மாணவிக்கு பலர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளதுடன் விருதுகளையும் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

கடந்த 18 ஆம் திகதி பாகிஸ்தான் நாட்டில் இடம்பெற்ற இரண்டாவது பாகிஸ்தான் சிறிலங்கா சவேட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை அணிசார்பில் பங்கேற்ற முல்லைத்தீவு யுவதி கனேஸ் இந்துகா தேவி என்ற யுவதி பெண்களுக்கான 25 வயதுக்குட்பட்ட 50 – 55 கிலோ கிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொற்றுச் சோதனைத் தளர்வு

கொரோனாப் பேரிடர் நாட்டுக்கு தொடர்ந்து நாளொரு சிக்கல், பொழுதொரு பிரச்சினை என்று தொல்லை கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது.

கொரோனாப் பரவல் தடுப்பு விவகாரத்தில் முக்கிய பங்காற்றுவது தடுப்பூசி. அவற்றை மில்லியன் கணக்கில் சுவீகரித்து, நாட்டுக்குப் பெற்றுத் தந்துள்ளது அரசு. இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளும் முயற்சி, காலம் தாமதித்து, மெத்தனமாக ஆரம்பிக்கப்பட்டதாயினும், பின்னர் அந்த விடயத்தில் அரச இயந்திரம் இரட்டை வேகம் காட்டியமை எல்லோராலும் அவதானிக்கப்பட்டு மெச்சப்பட்டது.

நாட்டில் உள்ள – தடுப்பூசி ஏற்றும் தகுதி கொண்ட – அனைவருக்கும் மூன்றாவது டோஸ் தடுப்பூசி ஏற்றக்கூடிய அளவுக்குத் தாராளமாக தடுப்பூசியைச் சுவீகரித்த அரசு, அவற்றை மக்களுக்குச் செலுத்துவதற்கான மருத்துவ – சுகாதார பணியாளர் தொகுதிகளையும் கனகச்சிதமாகக் களத்தில் இறக்கி, துரிதமாகக் காரியமாற்றியது.

இப்போது தடுப்பூசி ஏற்றுவதில் சற்று மந்த நிலை – பின்னடைவு – காணப்படுகின்றது என்றால், அதற்குக் காரணம் பொதுமக்களின் ஒத்துழைப்பின்மை, அசிரத்தை, பொறுப்பற்ற செயற்போக்கு என்பவைதான். அரசோ அல்லது நிர்வாகமோ அல்ல.

தடுப்பூசி ஏற்றப்படுவதுடன் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரும் என நம்பப்பட்டது. கடந்த ஆண்டு இறுதியில் அப்படித்தான் நிலைமை இருந்தது. ஆனால் கொரோனா வைரஸின் புதிய திரிவான ஒமிக்ரோன் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது. பரவும் திறனில் வீரியமும், வேகமும் கொண்ட ஒமிக்ரோன் தொற்றினால், தொற்றுக் கட்டுப்பாட்டு விடயம் கையை மீறிச் செல்வதை அதிகாரிகள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

கடந்த ஒக்ரோபர் 27ஆம் திகதிக்குப் பின்னர் – மூன்று மாதங்களாக – தினசரி தொற்றுடன் புதிதுபுதிதாக அடையாளம் காணப்படுவோர் தொகை மூன்று இலக்க எண்ணிக்கையிலேயே இருந்தது. அது இப்போது – நேற்று முன்தினம் முதல் – நான்கு இலக்க எண்ணிக்கைக்கு வந்து விட்டது. அதாவது தினசரி தொற்றுடன் அடையாளம் காணப்படுவோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டி விட்டது.

தொற்று பரவல் கணிப்பீடு தொடர்பில் புதிய நெருக்கடி ஒன்று குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு தொற்றுத் தீவிரமானபோது – மூன்றாம் அலையின் போது – தொற்றுத் தொடர்பாக தினசரி சுமார் 35 ஆயிரம் வரை பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட்டன. சில சமயங்களில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை ஐயாயிரத்தைத் தொட்டது.

ஆனால், தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ந்த போது தொற்றுச் சோதனையில் பழைய தீவிரத்தைக் குறைத்தனர் அதிகாரிகள். சில குறிப்பிட்ட – தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மட்டும் தீவிர தொற்றுச் சோதனை என்ற அளவுக்கு தொற்றுப் பரிசோதனையில் தளர்வு ஏற்பட்டுள்ளது.

ஆனால், இப்போது மீண்டும் தொற்றுப் பரவல் எகிறத் தொடங்கியுள்ளது. ஆனால் தொற்றுப் பரிசோதனை பழையபடி தீவிரப்படுத்தப்படவில்லை. மாறாக மேலும் தளர்த்தப்படுகின்றது. இது நல்லதற்கல்ல என்பதுதான் நிலைமை.

எழுந்தமானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில இடங்களில் மட்டும்தான் இனி தொற்றுச் சோதனை. அதுவும் அந்தத் தொற்றுச் சோதனைக்கான – அன்டிஜன் சோதனைப் பொதிகளுக்கு – பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வேகமாகவும், தீவிரமாகவும், வீரியமாகவும் பரவும் ஒமிக்ரோன் வைரஸ் தனது கைவரிசையைக் காட்டி வருகையில் இவ்வாறு தொற்றுச் சோதனை நடவடிக்கைகளைத் தளர்த்துவது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

# தனது இரண்டு ஆண்டு நிர்வாகமும் தோல்வி என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. சுட்டிக்காட்டு




நாட்டை எதிர்வரும் 3 ஆண்டுகளில் அபிவிருத்தியடைச் செய்வதாக தெரிவித்துள்ளதன் மூலம், தனது கடந்த இரண்டு ஆண்டு நிர்வாகமும் தோல்வியடைந்துள்ளமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவராகவே ஏற்றுக் கொண்டுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. எனினும் அடுத்த 3 ஆண்டுகளில் நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் குறிப்பிட்டுள்ளதன் மூலம் , கடந்த இரண்டு ஆண்டுகளும் தோல்வியிலேயே நிறைவடைந்துள்ளன என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் அல்ல, 3 மாதங்களுக்கான திட்டமிடல் கூட ஜனாதிபதியிடம் இல்லை. அவ்வாறு எதிர்வரும் 3 ஆண்டுகளில் நாட்டை மேம்படுத்துவதாயின் அதற்கான வேலைத்திட்டத்தை இவ்வாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

அரசாங்கத்தின் முற்போக்கற்ற தீர்மானங்களால் நாடு இன்று பெறும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் எந்த திட்டமிடலும் இல்லை. அதன் காரணமாக விலையை நிர்ணயித்து வெளியிடப்பட்ட 12 வர்த்தமானி அறிவித்தல்களும் மீளப் பெறப்பட்டுள்ளன.

டொலரைப் பெற்றுக் கொள்வதிலும் இவ்வாறு எவ்வித திட்டமிடலும் இல்லாத காரணத்தாலேயே வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு பணத்தை அனுப்புவதையும் தவிர்த்துக் கொள்கின்றனர். டொலர் நெருக்கடியால் சுமார் 1500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன. இவற்றுக்கான தாமத கட்டணங்களை யார் செலுத்துவது? அதற்கான பொறுப்பை யார் ஏற்பது?

உள்நாட்டு விடயங்களில் மாத்திரமின்றி வெளிநாட்டு பயணங்களிலும் இந்த அரசாங்கத்திடம் முறையான திட்டமிடல்கள் இல்லை. அதன் காரணமாகவே இந்திய பிரதமர் நாட்டில் இல்லாத போது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அந்நாட்டுக்குச் சென்று மீண்டும் இலங்கைக்குத் திரும்பினார். காரணம் இவரது வருகையோ சந்திப்போ இந்திய பிரதமரின் நிகழ்ச்சி நிரலில் காணப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

தற்போது இந்தியா, சீனா, பாக்கிஸ்தான் என ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கோருகின்றனர். நூலறுந்த பட்டம் போன்று அரசாங்கம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. எதிர்வரும் மூன்று வருடங்களில் நாட்டை முன்னேற்றுவதாயின் அதற்கான வேலைத்திட்டத்தை முன்வைக்குமாறு ஜனாதிபதிக்கு சவால் விடுக்கின்றோம். அவரால் அந்த சவாலை ஏற்க முடியாது. காரணம் அவரிடம் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான திட்டமிடல் கூடக் கிடையாது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்டவற்றின் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடைசெய்ய வேண்டும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடை செய்யும் நாட்டில் எவ்வாறு ஜனநாயகம் பாதுகாக்கப்படும். நாடாளுமன்றத்தில் அன்றி நாடாளுமன்றத்துக்கு அப்பால் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றமை, இவ்வாறான சர்வாதிகார போக்கை உள்ளடக்குவதற்கான முயற்சியாகக் காணப்படலாம் என்ற சந்தேகம் நிலவுகிறது. – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதலின் உண்மையை மறைக்கின்றன சில ஊடகங்கள்

## பேராயர் கர்தினால் சீற்றம்



நாட்டின் சில ஊடகங்கள் ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலின் உண்மையை மக்களுக்கு வெளியிடுவதில்லை என கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றம் சுமத்தியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இருக்கும் மறைக்கப்பட்ட உண்மையை ஊடகங்கள் நாட்டுக்கு வெளியிட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். சில ஊடகங்கள் அரசியல்வாதிகளுக்குத் தேவையான விதத்தில் தமது ஊடகங்களைக் கையாண்டு வருகின்றன.

எவ்வாறாயினும் ஈஸ்டர் தாக்குதலின் உண்மை வெளிவரும் நாளில் இந்த ஊடகங்கள் அழிந்து போகும் எனவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வார இறுதியில் கருத்து வெளியிடும் போதே பேராயர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# நிந்தவூரில் துப்பாகிச் சூடு ஒருவருக்குக் கடுங்காயம்

நிந்தவூர் – அட்டப்பளம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். அவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் .

திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் தாம் கைது செய்த ஒருவரை கூட்டிக்கொண்டு அந்தத் திருட்டு சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவரைத் தேடிச் சென்றுள்ளனர். அவரோ தம்வசம் வைத்திருந்த துப்பாக்கியால் தேடி வந்தவர்களை நோக்கி வேட்டுப் பிரயோகம் மேற்கொண்டபோது, ஒருவர் காயமடைந்தார் எனக் கூறப்பட்டது. காயமடைந்த நபர் தற்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

காலைக்கதிர் Kalaikkathir

# கிடைக்காத விடயம் ஒன்றைப் பெறுவதற்கு சில தமிழ் அரசியல் தலைவர்கள் முயற்சிப்பு!

## நீதி அமைச்சர் அலிசப்ரி யாழில் தெரிவிப்பு



கிடைக்காத விடயம் ஒன்றைப் பெறுவதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார்கள் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

சில அரசியல்வாதிகள் இங்குள்ள இளைஞர், யுவதிகளை பிழையாக வழி நடத்துகிறார்கள்.

கிடைக்காது எனத் தெரிந்து கொண்டும் அதனை பெற முயற்சிக்கிறோம் என இளைஞர்களை மக்களை தூண்டி விடுகிறார்கள். அது சாத்தியமல்லாத விடயம்.

எத்தனை இளைஞர், யுவதிகளை இவ்வாறான அரசியல்வாதிகள் போராட்டத்தின் மூலம் இழந்து விட்டோம். எத்தனை இளைஞர், யுவதிகள் வடக்கில் தமது எதிர்காலத்தை இழந்து விட்டார்கள்.

வடக்கில் உள்ள இளைஞர்களுக்கு நான் கூறிவைக்க விரும்புகின்றேன். உங்களை பிழையாக வழிநடத்தும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள்.

உங்களுக்கு நல்ல சிறப்பான எதிர்காலம் உள்ளது. உங்களுக்கு முன்னால் உலகம் உள்ளது. உலகத்தை நோக்கி–உற்றுப் பாருங்கள். ஆனால் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள்.

அத்தோடு இந்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி கடிதம் அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்புவதன் மூலம் ஒரு நாடு கிடைத்துவிடுமா?

ஏற்கனவே 13 ஆம் திருத்தச் சட்டம் இங்கே நடைமுறையில் உள்ளது. அதனை நாங்கள் பேசி அதனை நடைமுறைப்படுத்துமாறு கோரினால் அது சாத்தியப்படும். அதை விடுத்து நாங்கள் கடிதம் அனுப்புவதன் மூலம் அது நடைபெறாது.

அத்தோடு நானும் வெளிவிவகார அமைச்சரும் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் அனைத்து கட்சியினரையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்ய உள்ளோம்.

அவ்வாறான சந்திப்புகள் மூலம் இங்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் பேசி அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நான் யாழ்.சிறைச்சாலைக்கு சென்ற போது அங்கே போதைப்பொருள் தொடர்பான வழக்குடன் சம்பந்தப்பட்டோரே பலர் கைதிகளாக உள்ளார்கள்.

வடக்கில் இந்த போதைப் பொருளை தடுத்து நிறுத்துவதற்கான வேலைத்திட்டம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நான் யோசித்து இருக்கின்றேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை ஆரம்பித்து, அந்த புனர்வாழ்வு நிலையத்தில் ஊடாக போதைக்கு அடிமையானோருக்கு விழிப்புணர்வு மற்றும் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் வடக்கில் இந்த போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும்.

வடக்கில் காணி பிரச்சினை என்பது ஒரு பெரியக்காணப்படுகின்றது. இந்த விடயத்தை நாங்கள் கட்டாயம் ஜனாதிபதிக்குத் தெரிவித்து அதற்கு என்ன செய்யலாம் என்ற விடயம்தொடர்பில்நான்ஆராய்வேன். – எனத் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை மாணவி கொவிட்டுக்குப் பலி!

மஹரகமபகுதியைச்சேர்ந்த 11 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் கொவிட் நிமோனியாவால் உயிரிழந்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர்வைத்தியர்ஜி.விஜேசூரிய இந்தத் தகவலைத் தெரிவித்தார். லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையில் தினமும் சுமார் 25 கொவிட் தொற்றுக்கு உள்ளான சிறுவர்கள் சேர்க்கப்படுகின்றனர் எனவும் மருத்துவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

'மஹரகம பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுமி கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார் என ஞாயிற்றுக்கிழமை எமக்குத் தெரிவிக்கப்பட்டது. முழுமையான தகவல்கள் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. அவள் ஓரளவு பருமனான சிறுமி என எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்படுவதில்லை. அந்த குழந்தைகள் தற்போது பாடசாலைக்கு சென்று வருகின்றனர். நாடு திறந்த நிலையில் உள்ளது. உங்கள் பிள் ளைக்கு இந்த அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், மருத்து வரைச் சந்தித்து மருத்துவ ஆலோசனையின் பேரில் மட்டுமே வீட்டில் சிகிச்சை பெறுவதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

## சுற்றுலா பயணிகள் 75 ஆயிரத்துக்குமேல் ஜனவரியில் மட்டும் நாட்டுக்கு வருகை!



ஜனவரி மாதத்துக்குள் மட்டும் நாட்டுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 75 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அத்கமைய, இம்மாதம் முதலாம் திகதி முதல் 29ஆம் திகதி வரை 76 ஆயிரத்து 536 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதில் 12 ஆயிரத்து 368 பேர் ரஷ்யாவிலிருந்து நாட்டை வந்தடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் எனச் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் போலந்து, மாலைத்தீவு மற்றும் கஸ்க்ஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

# 13 ஆவது திருத்தத்தை தானும் ஏற்கவில்லையாம்!

## சிறிதரன் எம்.பி. திட்டவட்டம்



13 ஆவது திருத்தத்தை தான் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற நிலையில் அதன் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

13 ஆவது திருத்தச் சட்டத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் எமது மக்களை ஏமாற்றும் வகையில் பொய்யாகப் புனையப்பட்டுள்ள சில விடயங்கள் இருக்கின்றன.

மேலும் அதிலே தெளிவாகவும் சொல்லப்படவில்லை. அத்தோடு இது தொடர்பாக எங்களது கூட்டத்தில் ஆராய்ந்திருந்தோம். இந்தியாவிடம் நாங்கள் 13 ஐப் பற்றிக் கேட்கத்தேவையில்லை.

ஏற்கனவே இந்தியப் பிரதமர் மோடி கூட்டு சமஷ்டி வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அதே போன்று இம்முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது ஈழத்திற்கான வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தி.மு.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே ஜெயலலிதாவால் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருந்தது.

இவ்வளவும் நடந்த பின்பும் நாங்கள் அதைக் கேட்பது காலத்துக்கு பொருத்தமானதா என்று எனக்குத் தோன்றவில்லை. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்கள் தொடர்பாக எடுத்த எடுப்பில் செய்யமுடியாது

## செந்தில் தொண்டமான் தெரிவிப்பு



இந்தியா எங்கள் நண்பன், அதிக உதவிகளை இங்கே செய்துள்ளனர். ஆகவே, மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளை நாம் சரியான முறையில் அணுகித் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தரும், பிரதமரின் இணைப்புச் செயலருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

எல்லை தாண்டி மீன் பிடித்தால் சிறையில் அடைக்கப்படுவோம், உடைமைகள் அரசுடைமையாக்கப்படும் என தெரிந்தும் அவர்கள் இங்கே வந்து மீன்பிடிக்க மாட்டார்கள் என நான் நினைக்கின்றேன்.

எடுத்த எடுப்பில் சில விடயங்களை நாம் செய்ய முடியாது. இந்திய மீனவர்களைச் சிறைபிடித்து நீண்டகாலம் வைத்திருக்கவோ முடியாது. இந்தியாவுடன் நாம் நீண்ட காலமாக நட்புறவைப் பேணி வருகின்றோம்.

இலங்கை அகதிகள் பலருக்கும் தமிழக அரசு அங்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. அதேபோன்று சுமார் 50 ஆயிரம் வீடுகளை வடக்கு கிழக்கில் அமைத் துக் கொடுத்துள்ளனர். இரண்டு நாடுகள் நட்பு ரீதியாக பேசி தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினை. இதனை அரசியலாக்கக் கூடாது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 269

**685.ஏன் ஐந்து வருடங்கள் தான் எனக் குறிப்பிடுகிறீர்கள்?**

தமிழ்த் தேசியப் பரப்பில் 1976 இல் இருந்தே இயங்கிய அனுபவங்கள் அதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. தமிழ்க்



கட்சிகளின் குறிகள் தேர்தலுக்குத் தேர்தல்தான். தலைவர்கள் வென்றுவிட ஏதுவான நியமனங்களைத் தங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொண்டார்கள். தேசிய கட்டமைப்புக்களை அமைத்ததோ, கட்சித் தொண்டர்களை எந்த நேரமும் போராட்டத்தில் ஈடுபடக் கூடிய கொதிநிலையிலேயே வைத்திருந்ததோ இல்லை. மக்களின் தலைவர்களாக வலம் வந்ததில் திருப்தி அடைந்தார்கள். ஆனால்சிங்கள–பௌத்த பேரினவாதமோ தங்களது நலன்களுக்கு என்று ஓர் அரசு இருந்ததை விட, பலவகைக் கட்டமைப்புக்களை அமைத்து, அவற்றினூடாகத் தமிழ்ப் பிரதேசங்களில் ஆட்சி நடத்துகிறார்கள். அவை முன்னேறி வந்து கழுத்தை நெரித்து மூச்சுத் திணறலை ஏற்படுத்துகின்றன. அந்தக் கழுத்து பிடி உடனடியாக எடுக்கப்படாவிட்டால் மூச்சு நிற்கும். அது இயற்கை. அதனை விளங்கிக் கொள்ள பெரிய தத்துவம் தேவைதயில்லை. தற்போதைய ஜனாதிபதியின் திட்ட நிரல்களின் படி அவரது மிகுதிக் காலமும் அடுத்த பதவிக்காலமும்தான் தேவையானது. அவர்கள் எதிர்பார்க்காதது கொரோனாவும் தொடர்ந்த பொருளாதார நெருக்கடியும்தான். அதற்குள்ளும் பேரினவாதத்தைத் திருப்திபடுத்தி, சிங்கள - பௌத்தத்தைப் பலமாக, எல்லா சிறு பான்மையினரையும் விலத்தி, ஆட்சியில் ஏற்ற எடுத்த முனைப்புக்கள் குறையவில்லை. அவற்றையொட்டி அவர்களுக்கு மனக் கிலேசம் எதுவும் இல்லை. போருக்கு முன்னால், பின் போர்க் காலத்தில், முஸ்லிம் மக்களோடு இருந்த உறவும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன் கத்தோலிக்கப் பேராயரோடு இருந்த உறவும், அந்த இரு தரப்பினரும் தற்போதைக்கு கணக்கெடுக்கப் படாதமையும், சிங்கள, பௌத்தர்களையே தான் பிரதிநிதித்துவப் படுத்துகிறேன் என ஜனாதிபதி பறைசாற்றுவதும் வெளிப்படையானவையே. அந்த நிலைப்பாடுகளில் அவர்கள் எந்த சிறுபான்மைக் குழுமத்தையுமோ, அவர்களது அபிப்பிராயங்களையோ செவிமடுக்கப் போவதில்லை. அவற்றுக்கான அவர்களின் அட்டவணைப்படி, ஐந்து வருடங்களே ஸ்ரீலங்காவுக்கு நிரந்தரமான, மாற்றமுடியாத சிங்கள - பௌத்த ஒற்றையாட்சிக்கான அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றி அதிகாரங்களை அவ்வாறு கையாளத் தேவை. தேசியத்துக்கு மண், மொழி, பண்பாடு, பொருளாதாரம் என்பன இன்றியமையாதவை. இவை இல்லாது தேசியம் இல்லை. அவற்றுக்கான கட்டமைப்புக்கள் மக்களாலோ, அவர்களது தலைவர்களாலோ உருவாக்கப்பட்டு வழிநடத்தப்படல் வேண்டும்.



1977 இன் கலவரத்தின் பின் வட்டுக்



கோட்டைத் தீர்மானத்தின் எதிரொலியை 1976 லிருந்து கணக்கிட்டு ஆராய்ந்து கொண்டிருந்த புத்திஜீவிகளால்தான் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் (TRRO) ஒரு கட்டமைப்பாக, தேசிய நோக்கில் தமிழ் மக்களது பொறுப்புக்களைப் பல தளங்களில் பொறுப்பேற்றுச் சுமந்தது. அகதிகளின் பராமரிப்பு, நிவாரணம், மீள்குடியேற்றம், ஆவணங்கள் சேகரிப்பு, மனித உரிமைகள் மீறல்கள் பற்றியதான தகவல் பரிமாற்றம், சர்வதேச ஈடுபாடு, அவற்றுக்கு அனுசரணையாக லண்டனில் தமிழர் தகவல் நடுவம் (Tamil Information Center) நிறுவப்பட்டு, அதற்கு இணையாக தமிழ் நாட்டில் கிளைகள், சற்றடே ரிவியூ (Saturday Review ) என்று ஆங்கிலத்தில் பத்திரிகையும் பல சஞ்சிகைகளும், அவற்றின் மேல் சன்சோனி ஆணைக்குழுவின் முன்பு நடந்த விசாரணைகளுக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது எனப் பல.

அத்தோடு அப்போது எல்லைப்புற கிராமங்களின் குடியேற்றங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை அமுல்படுத்திக் கொண்டிருந்த காந்தீயம் போன்ற அமைப்புக்களுடனும் இணைந்து பணியாற்றியது அது. இந்த வேலைப்பாடுகளிலும் கட்டமைப்பின் பணிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி குளிர்காய்ந்தாலும் ஆதரவாக இயங்கினார்கள்.

பின்னர் விடுதலைக் குழுக்கள் தங்களைப் பலப்படுத்த, தங்களது அமைப்புக்களை உருவாக்கித் தங்கள் லட்சியங்களுக்கும், அவற்றின் பாதைகளுக்கும், மக்களிடையே ஆதரவு தேடினார்கள். அவை ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டோ, பலமிழக்க, விடுதலைப் புலிகள் தேசிய கட்டமைப்புக்களைத் தங்களது இராணுவப் பலத்தாலும் புலம் பெயர் நிதியினாலும் ஓரளவுக்கு பாதுகாத்தார்கள்.

ஆனால் போரின் பின் ஆக்கிரமிப்புக்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய எதுவித கட்டமைப்புக்களையும் அரசியல் கட்சிகள் தேசீயத்தை நிலையாக்கிக் கொள்ள உருவாக்கி வழிநடத்தவில்லை. வாழ்வாதாரங்களுக்காக புலம்பெயர் அமைப்புக்கள் உதவி தந்து நடத்திய கட்டமைப்புக்களிலேயே பொறுப்புக்களை விட்டுத் தேர்தல் வியூகங்களை மட்டும் கிரமமாகவும் கவனமாகவும் வகுத்தார்கள். பல புத்திஜீவிகள் அப்படியான கட்டமைப்புக்கள் தேவை என கூறிவருகிறார்கள். இருக்கக் கூடிய இந்த ஐந்து வருடங்களில் புதிய கட்டமைப்புக்களை உருவாக்கி, அவற்றை வளர்க்கு முன்னே பிரச்சினைகளால் அவை உதிர்ந்துவிடக்கூடியது சாத்தியங்களே மேலதிகமாக உண்டு.

ஆதலால் புலம் பெயரின் 1977 இல் இருந்து தேசியத்திற்காக இயங்கும் அமைப்புக்கள் அவர்களின் பொது நிலைப்பாடு என தமிழ் மக்களுக்காகப் பயணிக்க வேண்டும். அவ்வகையான பொது நிலைப்பாட்டிற்கு நாட்டில் அனுசரனை எல்லா மட்டத்திலும் வளர வேண்டும்.

**686.புலம்பெயர் அமைப்புக்கள் அப்படி இணைவார்களா?**

இப்படியான இணைவுகள் தமிழ் மக்களின் இன்றைய காலகட்டத்தின் தேவை. நிர்ப்பந்தம். ஒரு பாரிய கட்டமைப்பாக, இணையாமல் விட்டாலும் ஒரு பொது நோக்கில் யதார்த்தமான வழிவகைகளில் தீர்வை சர்வதேசத்துடன் அணுக வேண்டும். 1977 இல் இருந்து இயங்கியவற்றில் அநேகமாக யாவையுமே தேசியத்தை ஆதரித்து, செயற்பாடுகளால் உதவி வழங்கின.

சில அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவார்களுக்கிடையே பல அமைப்புக்கள் தோன்றின. கொள்கை ரீதியிலும் லட்சியங்களிலும் அவை ஒன்றானாலும் தனிநபர் சார்ந்த அணுகுமுறைகளால் தம் வழி சரியான வழி என இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் எல்லோரையும் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு கொண்டு



வருவதற்கான முனைப்புக்கள் எடுக்கப்பட வேண்டியது முக்கியம். இவற்றைக் காலம் தாழ்த்துவது தமிழ் தேசியத்துக்கான மரண அடியாகும். சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களிடையே உள்ள தன்னலங்களையும் பிரிவினைகளையும் பாவித்து தங்களது வியூகங்களை முன்நகர்த்திச் செல்லும்.

(வளரும்)



# சுதந்திர தின விழா அணிவகுப்பில் 6 ஆயிரத்து 500 படைவீரர் பங்கேற்பு

## கமல் குணரத்ன தெரிவிப்பு



74 ஆவது சுதந்திர தின விழா அணிவகுப்பில் 6 ஆயிரத்து 500 படை வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இவர்கள் முப்படை, பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப் படை, இலங்கை சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய கெடட் படையை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 3 ஆயிரத்து 463 இராணுவ வீரர்கள், 919 கடற்படை வீரர்கள், 804 விமானப்படை வீரர்கள், 336 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 282 பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அணிவகுப்பில் இணையவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கை சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 437 பேரும் தேசிய கெடட் படையைச் சேர்ந்த 259 பேரும் அணிவகுப்பில் பங்கேற்கவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 74 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வை சுதந்திர சதுக்க வளாகத்தில் மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் நடந்த தாக்குதலின் பின்னணியில் அரசியல் தலையீடு

தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் மீது மேற்கொள்ளப்பட்ட முட்டைத் தாக்குதலை அரசியல் தலையீடுகளால் மறைக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பிரசன்ன ரணதுங்க பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியதன் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தெளிவாகின்றது எனக் கூறினார். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருப்பதை மறைக்க முடியாது என்றும் இவற்றை மறைக்க முற்பட்டாலும் மக்கள் உண்மையை அறிந்துள்ளனர் எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

சட்டவிரோத நடவடிக்கை மூலம் தேசிய மக்கள் சக்தியின் பயணத்தை தடுக்க முடியாது என்றும் இவ்வாறான முயற்சிகள் பொதுமக்களிடையே மேலும் அதிருப்தியை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

# வைத்தியசாலைப் பணியாளர்கள் பயணித்த வாகனம் டிக்கோயா வனராஜாவில் விபத்து!

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் பயணித்த வான் ஒன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணஞ் செய்த 09 பேர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை திகதி மாலை 6.45 மணியளவில் வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா பகுதியில் இடம்பெற்ற கிரிகட் சுற்றுப்போட்டி ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு திரும்பி செல்லும் போது குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாகவும், இதன் போது 16 பேர் வரை பயணஞ் செய்துள்ளனர் எனவும் வான் அதிக வேகத்தில் சென்று வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமையால், தொழிற்சாலையில் அமைக்கப்பட்டிருந்த சல்லடை கம்பி பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளன.

இந்த விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் வரை வீதி போக்குவரத்தும் தடைப்பட்டது.

குறித்த தனியார் வான் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அநுரவின்மீது முட்டை வீசியவன் நானல்லன்!

## என்கின்றார் அமைச்சர் பிரசன்ன



நாடாளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்கவின் கார் மீது நடத்தப்பட்ட முட்டை வீச்சு தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே தாக்குதல் சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த சம்பவத்தில் தனக்கு தொடர்பு இருப்பதாக வெளியான செய்திகளை மறுத்து, ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

முட்டைத்தாக்குதலைநடத்தியவர்களுக்கும் அதனை நடத்தக் கூறியவருக்கும் கடுமையானதண்டனைகள்வழங்கப்படவேண்டுமென பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# வடக்கு உட்பட 14 ரயில் சேவை இரத்து!

சில ரயில் மார்க்கங்களின் 14 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாட்டாளர்கள் பலருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதால் இவ்வாறு ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பிரதான ரயில் மார்க்கத்தின் 6 ரயில் சேவைகளும், களனி வெளி மற்றும் கரையோர ரயில் மார்க்கங்களின் தலா 2 ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மேலும் புத்தளம் ரயில் மார்க்கத்தின் 3 சேவைகளும், வடக்கிற்கான ஒரு ரயில் சேவையும் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருதுகள் விழா





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை (30.01.2022) யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே. அரசகேசரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரை யாளர் ஏ. எம். றியாஸ் அகமட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கடந்த ஆண்டு தேசிய ரீதியில் மாணவர்களிடையே இணைய வழியில் சூழல் பொதுஅறிவுப் பரீட்சையொன்றை நடாத்தியிருந்தது. இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் பங்கேற்றிருந்த இப்பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் பசுமை அமைதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களோடு விசேட சித்தி மற்றும் அதிதிறமைச் சித்தி பெற்ற மாணவர்களில் ஒரு தொகுதியினர் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சிவகரன் அபிசாய்ராம் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஷண்முஹி கருணாநிதி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும், மட்டக்களப்பு புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த செல்வி டிலுக்சினி டன்ஸ்ரன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டார்கள். இவ்விருதுகள் சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதை இயற்கை விவசாயி அல்லைப்பிட்டி மகேஸ்வரநாதன் கிரிசன் பெற்றுக்கொண்டார். தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட இந்த விருதோடு, ஒரு லட்சம் ரூபா பொற்கிழி வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வரவேற்புரையை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல்பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆற்ற, நன்றியுரையை பொதுச் செயலாளர் ம. கஜேந்திரன் நிகழ்த்தியிருந்தார். பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்த இவ்விழாவுக்கான அனுசரணையை புலம்பெயர்ந்த தமிழர் கூட்டமைப்பு வழங்கியிருந்தது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் 5 கிலோ மீற்றர் கார்பெற் வீதி அமைக்கும் பணி ஆரம்பம்





கிளிநொச்சி, பெப். 01

'சௌபாக்கியமான நோக்கு' கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக வீதி மற்றும் பெருந் தெருக்கள், வீதி அபிவிருத்தி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகள் அமைக்கும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தினுள் அடங்கும் சுமார் 5 கிலோ மீற்றர் வீதி அமைக்கும் பணி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் 250 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள 5.1 கிலோ மீற்றர் நீள வீதி அமைக்கும் வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.பிரபாகரனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி ரி.கே. இளங்கீரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி அ.அற்புதராஜா, தொழில் நுட்ப பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் திருமதி சிவமதி சிவச்சந்திரன், விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.வசந்தரூபா, யாழ். பல்கலைக்கழக வேலைகள் பொறியியலாளர் எந்திரி கே.கடம்பசீலன், நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ் உமேஸ், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

வீதி அபிவிருத்திப் பணிகளைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்ததுடன், ஆரம்ப நிகழ்வை நினைவு கூறும் வகையில் அந்தப் பகுதியில் மர நடுகை நிகழ்வொன்றும் இடம் பெற்றது.

## தாயின் தலையில் குத்தி கொலை செய்த மகன்!

கொகரெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இறப்பர் தோட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் பெண் ஒருவர் தனது மகனால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் தலையில் இரும்பு கம்பியால் குத்தி இந்த கொலை சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலையை செய்த பெண்ணின் மகன் மன நலம் பாதிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த கொலை சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், தெஹல்கமுவ, இப்பாகமுவ பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கொகரெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரஷ்ய புகைப்படக் கலைஞர் இலங்கையில் வைத்து கைது

அனுமதியின்றி ட்ரோன் கமெராவை பயன்படுத்திய ரஷ்ய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிரிஸ்ஸ கடற்கரை பகுதியில் அனுமதியின்றி ட்ரோன் கமெராவை இயக்கிய குற்றச்சாட்டுக்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மிரிஸ்ஸ கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் வெலிகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், விடுமுறைக்காக இலங்கைக்கு வந்திருந்த ரஷ்ய புகைப்படக் கலைஞர் என்பதுடன் மிரிஸ்ஸ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் அனுமதியின்றி ட்ரோன் கமெராக்களை பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில இளைஞர் ஒருவரை காணவில்லை என்று முறைப்பாடு

வவுனியா, தேக்கவத்தை பகுதியை சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் ஒருவரை காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் வசித்து வந்த 30 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த 27 ஆம் திகதி வவுனியா, குருமன்காடு பகுதிக்கு சென்று வருவதாக வீட்டில் கூறிவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். எனினும் அதன் பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

நான்கு நாள்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டுக்கும் வராத நிலையில், அவரது தாயாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பாலகிருஷ்ணன் நிரேஸ் (வயது 30) என்ற இளைஞரே இவ்வாறு காணாமல்போயுள்ளமையுடன், அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0778013692, 0771014446 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தித் தெரியப்படுத்துமாறு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறும் உறவினர்கள் கோரியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

## 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கு கரன்னாகொடவின் மனு ஏப்ரல் விசாரணை

வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் பிரதிவாதியாக தன்னை பெயரிட்டமைக்கு எதிராகவே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தன்னை பிரதிவாதியாக பெயரிடும் தீர்மானம் ஆதாரமற்றது என்று சுட்டிக்காட்டும் வசந்த கரன்னாகொட அதனை இரத்து செய்யும் நீதிப் பேராணை கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

## கால்வாயில் இருந்து ஆணின் சடலம் மீட்பு!

பொரளையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொரளை லேக் டிரைவ் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றினுள் இருந்து குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் காட்டு தீ!

டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த காட்டுப் பகுதிக்கு இனந்தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நீர்வீழ்ச்சியை அண்மித்த பகுதியில் சுமார் 30 ஏக்கர் வரை தீயால் எரிந்து நாசமாகியுள்ளன.

மலையக பகுதியில் வரட்சியான காலநிலையுடன் கடும் காற்றும் நிலவி வருகிறது. பற்றைக் காடுகள் கருகி போயுள்ளதால் தீ மிக வேகமாக பரவி வருகிறது. இதனால் தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவது கடினமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரட்சியான காலநிலையை அடுத்து மலையக நீர்ப்பாசன பிரதேசங்களுக்கு சமீபமாக நீரேந்தும் பிரதேசங்களிலுள்ள காட்டுப் பகுதிகளுக்கு இனந்தெரியாத விசமிகள் தொடர்ச்சியாக தீ வைத்து வருகின்றமையால் பாரிய அளவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களுக்கு தீ வைத்ததன் காரணமாக அப்பகுதியில் உள்ள நீர் ஊற்றுக்கள் அற்றுப்போவதுடன் சிறிய வகை உயிரினங்கள், பிரதேசத்துக்கே உரித்தான அரிய வகை தாவரங்கள் பெறுமதிமிக்க மரக்கன்றுகள் ஆகியன அழிவடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளன.

வரட்சியான காலநிலையை அடுத்து பல பிரதேசங்களில் தற்போது குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில் தொடர்ச்சியாக வனப்பகுதிகளுக்கு தீ வைப்பதால் இந்நிலை மேலும் அதிகரித்து நீரின்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என பிரதேச வாசிகள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

மேலும், நீர்பாசன பிரதேசங்களில் உள்ள காட்டுப் பகுதிக்கு தீ வைப்பதால் தேசிய மின் உற்பத்திக்கும் பாதிப்பு ஏற்படலாம். எனவே காடுகளுக்குத் தீ வைப்பவர்களை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

மிருகங்களை வேட்டையாடுவதற்கும் பொழுது போக்குக்காகவும் குறித்த காட்டுப் பகுதிகளுக்கு சில விசமிகளால் தீ வைக்கப்படுவதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவிக்கின்றனர். எனவே, வனப் பகுதிகளை விசமிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தகவல்களை வழங்காத அரச நிறுவனங்கள் குறித்து விசாரணை

தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே மேல் முறையீடுகளை விசாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் மேன்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமையுடன், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை பரிசீலித்ததன் பின்னர், கொழும்பிற்கு வெளியே உள்ள பகுதிகளிலும் விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி அண்மையில் யாழ். மாவட்டத்தை மையப்படுத்தி மேன்முறையீட்டு விசாரணைகள் இடம் பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்தி அடுத்த சில வாரங்களில் மற்றுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேபோல், தகவல்களை வழங்காத அரச நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளில் பெரும்பாலானவை பிரதேச செயலகங்கள், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் குறித்து கிடைக்கப்பெற்றுள்ளன என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு எதிராகவும் கணிசமான எண்ணிக்கையிலான மேன்முறையீடுகள் கிடைத்துள் என எனவும் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 43 இந்திய மீனவர்களுக்குக் கொரோனா

## நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களே பாதிப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்ட போதிலும்கொரோனா காரணமாகதாயகம் பயணிப் பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலை யில் இருந்து விடுவிக்கப்பட்ட 56 இந்திய மீனவர்களில் 43 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதால் அவர்கள் இந்தியா செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 மற்றும் 21ஆம் திக திகளில் 8 படகுகளுடன் கைதுசெய்யப்பட்ட 56 மீனவர்களும் கடந்த 25ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விமானச் சிட்டை பெறுவதற்காக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 43 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமை மீனவர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் கொரோனா காலத்து 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவு பெற்ற பின்பே அவர்கள் இந்தியாவுக்குப் பயணிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நீதி கோரி யாழில் நேற்று போராட்டம்

(இ.கலையமுதன்)

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப் பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் நகரில் நேற்று 'கறுப்பு ஜனவரி' கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஒன்றுகூடிய ஊடகவியலாளர்கள் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், இது தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் ஊடக அமையம், சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் பங்கேற்புடன் 'கறுப்பு ஜனவரி' போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

## கொழும்பு மாநாகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் சுற்றாடல் குழுவின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மிளகாய்த்தூள் கலந்த கூழ் முட்டைகளால் தாக்கப்பட்டார்.

சுற்றாடல் மற்றும் காணி நிலைக் குழுவின் தலைவர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதீப் ஜயவர்தனவும், அதே கட்சியின் சமன் அபேகுணவர்தனவும் போட்டியிட்டனர்.

இரகசிய வாக்கெடுப்பில் பிரதீப் ஜயவர்தன 4 வாக்குகளையும், சமன் அபேகுணவர்தன 2 வாக்குகளையும் பெற்றனர்.

தோல்வியைத் தாங்க முடியாத சமன் அபேகுணவர்தனவுக்கு நெருக்கமான பெண் உறுப்பினர் ஒருவர் பிரதீப் ஜயவர்தன மீது மிளகாய்த்தூள் கலந்த கூழ் மூட்டைக் கலவையால் தாக்கினார்.

இது குறித்து அங்கிருந்த மாநகர சபை உறுப்பினர் ஒருவர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், இரகசிய வாக்கெடுப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், சபையின் பெண் உறுப்பினர் ஒருவர் தனது கைப்பையில் மறைத்து வைத்திருந்த பொதி ஒன்றை எடுத்து பிரதீப் ஜயவர்தன மீது வீசினார் எனத் தெரிவித்தார்.

அந்தப் பொதி பிரதீப் ஜயவர்தனவின் தலையில் மோதி வெடித்துச் சிதறியது எனவும், அவரது உடல் முழுவதும் துர்நாற்றம் வீசும் கூழ் முட்டைகளால் நனைந்தது எனவும் அவர் மேலும் கூறினார்.

கூழ்முட்டைத் தாக்குதலுக்குப் பின்னர், மாநகர சபை உறுப்பினர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து ஒருவரையொருவர் பார்த்து கூச்சலிடத் தொடங்கினர்.

இதனால் கொழும்பு மாநகர சபையின் குழு மண்டபம் ஒரே குழப்பமாக மாறியது. பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் தலையிட்டு சமரசம் செய்தனர்.

பிரதீப் ஜயவர்தன வேறு ஆடை அணிந்து அங்கிருந்து சென்றார் என்று குறித்த மாநகர சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதீப் ஜயவர்தன, கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனாநாயக்கவிடமும், கறுவாத் தோட்டை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

## இந்திய மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலைகளே அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

அதனைக் கண்டித்து மீனவர்கள் சுப்பர்மடம் பகுதியில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதிகளில் படகுகளை, வலைகளை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அந்த வீதி ஊடான போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிப்படைந்தன.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாகப் பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தோம். பல கட்டங்களாகப் போராட்டங்களை முன்னெடுத்தோம். இது எதற்குமே பயனில்லை.

மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. அவர்களைக் கட்டுப்படுத்தவோ – அவர்களைத் தடுத்து நிறுத்தவோ எவரும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

அத்துமீறி எமது எல்லைக்குள் நுழையும் மீனவர்கள் மீது தாக்குதல் நடாத்தி அவர்களை விரட்டியடிக்க எம்மால் முடியும். ஆனால், நாட்டின் சட்ட திட்டங்களுக்குக்கட்டுப்பட்டும், நாட்டின்நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்திலையே நாம் பொறுமை காக்கின்றோம்.

அத்துமீறும் மீனவர்களை, அவர்களின் படகுகளுடன் சிறைப்பிடித்து எமது கரைக்குக் கொண்டு வரவும் எம்மால் முடியும்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேவேளை, எமது பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ளா விடின் நாம் சீனாவின் உதவியை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

கடற்றொழில் அமைச்சர் இது தொடர்பில், நடவடிக்கை எடுக்க முடியாவிடின் அவர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதே சிறந்தது – என்றனர்.

## ஏப்ரல் வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 11 ஆயிரத்து 185 ஆக அதிகரித்துள்ளது.

## காய்ச்சலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார்.

மாணவியின் குருதி மாதிரியை பரிசோதனைக்கு உட்படுத்தி டெங்கு காரணமாக உயிரிழந்தாரா என்பது தொடர்பில் கண்டறியுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், அவர் நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டது.

## மன்னார் கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமுக்குள் அதிரடியாகப் புகுந்த இருநூறுக்கும் மேற்பட்டோர் கடற்படை முகாமின் கடற்கரைப் பகுதிக்குள் புகுந்து, வலைகளோடு அந்தப் படகுகளையும் 30 சந்தேக நபர்களையும் கொண்டு சென்றனர் என கடற்படையினரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக 30 மீனவர்களையும் கைது செய்து, சான்றுப் பொருள்களான 7 படகுகளையும், அதில் இருந்த – அந்த மீனவர்களால் பிடிக்கப்பட்ட – மீனையும் கடலில் கைப்பற்றி, நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்காக கடற்படை முகாமின் கடற்கரைப் பகுதிக்குக் கொண்டு வந்து வைத்திருந்த சமயம், நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பெண்களும், ஆண்களுமாக சாரி சாரியாக கடற்படை முகாமிற்குள் புகுந்து அத்துமீறி அவற்றை கொண்டு சென்று தமது அரச பணிக்கு இடையூறு விளைவித்தனர் என கடற்படையினரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்தச் சம்பவத்தின்போது மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளும் கடற்படை முகாமிற்குள் பிரசன்னமாகி இருந்தமையால் அவர்களே இந்தச் சம்பவத்தின் சாட்சிகள் எனப் பதியப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை கடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து அடாவடியில் ஈடுபட்டு இந்திய மீனவர்கள் தொழில் புரிகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று பருத்தித்துறை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து இழுவை ட்ரோலர் படகுகளில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட இந்திய மீனவர்கள் இன்று நீரியல்வளத் திணைக்களம் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.



# மன்னார் மாவட்டத்தில் கவனவீர்ப்பு போராட்டம்







மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வு உள்ளடங்களாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று (திங்கட்கிழமை) காலை மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. மன்னார் பஜார் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் சிலைக்கு முன்பாக குறித்த கவனவீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி மன்னார் மாவட்ட செயலக பகுதியை வந்தடைந்தது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாவட்ட செயலகத்திற்கு முன் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வுக்கு எதிராகவும், மேற்படி நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் மன்னார் பகுதியில் அமைக்கப்பட்ட உயர் மின் வலு காற்றாடிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற வீதிகள் தரமற்றனவாகக் காணப்படுகின்றமை குறித்தும், போதைப்பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மக்களுக்கு இந்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நகர சபை பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் பின் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை வழங்கி வைத்தனர். மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் இந்த விடயம் தொடர்பில் உரிய உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்.

## போலி நாணயத் தாள்களோடு ஒருவர் களுத்துறையில் கைது

களுத்துறை பிரதேசத்தில் போலி நாணயத் தாள்களோடு சந்தேக நபர் ஒருவர் நேற்று (திங்கட்கிழமை) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பழங்கள் கொள்வனவு செய்வதற்காக 1,000 ரூபா போலி நாணயத்தாளை வழங்கும் போதே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது 1,000 ரூபா நாணயத்தாள்கள் 19, ஸ்கேனர் இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரம் மற்றும் கணனி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவத்தின்போதுகைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அம்பந்தோட்டை, வீரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவராவார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நீர்கொழும்பில் இருவர் கைது!

நீர்கொழும்பு – பெரியமுல்ல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு இணங்க இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தின் போது இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 46 மற்றும் 52 வயதுடைய நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயிலில் மோதி இருவர் பலி! ஒருவர் தப்பியோட்டம்

ஜா – எல மற்றும் ஹிங்குராங்கொட பிரதேசங்களில் ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மற்றும் இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜா – எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குடஹகபொல பிரதேசத்தில் உள்ள ரயில் கடவையில் ஒளிச் சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்த போதும் ஓட்டோ ஒன்று ரயில் கடவையை கடந்த போது, கொழும்பு கோட்டையிலிருந்து சிலாபம் நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோ இருவர் பயணித்துள்ள நிலையில் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய நபர் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 31 வயதுடைய தெகட்டானை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஹிங்குராங்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹடமுன பிரதேசத்தில் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த சரக்கு ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹிங்குராங்கொட – ஹதமுன பகுதியைச் சேர்ந்த 40 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2022இல் வெளியிடப்பெற்றது.